# அஞ்சல்

The Anchal

Vol:VI No:3 London April 01 - 14, 2001 Tel: 020-8426 4567 Fax: 020-8423 0393



RELIGION EDUCATION INFORMATION ENTERTAINMENT POLITICS SPORTS MUSIC NEWS

TBC

Video 10891 GHz
Audio 7.92 MHz (H)

புதிய அலைவரிசையில்

Tel: 020-8864 0909
Fax: 020-8864 0700

EASTHAM ACCESS

LEADING ADVISORS & BROKERS

வீட்டுக் கடன் வசதிகளுக்கும், காப்புறுதிகளுக்கும் முன்னணியில் திகழும் பதிவுசெய்யப்பட்ட தமிழர் நிறுவனம்

MORTGAGES
- Houses
- Re-Mortgages
- Buying of rent out properties

LOANS
- Quick loans for Home owners
- Venture capitals & Factoring services
- Arrangement to purchase existing shops
- Lease arrangements - more than 15 years

INSURANCES
- All types of insurance with various insurers
- Building & Contents & Shops

317B High Street North, Manor Park
London E12 6SL
Tel: 020-8586 7856 / 020-8586 9066
After Office: 020-8471 3294


### மன்னாரில் பெண் கைதிகள்மீது படையினர் பலாத்காரம்:

# சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

**இலங்கை பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்கள் பாலியல் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு தப்பித்துக்கொண்டுவிடுகிறார்கள் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.**

**இவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

அண்மைக் காலங்களில் மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினரின் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக வெளிவந்த பல்வேறு செய்திகளைத் தொடர்ந்தே, பாதுகாப்பில் வைக்கப்படும் பெண்களின் பாதுகாப்பு உதாசீனப்படுத்தப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்கிறது.

மார்ச் 19ஆம் தேதி மன்னாரில் பொலிசாரினாலும் கடற்படையினராலும் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில்வைக்கப்பட்ட இரு பெண்கள் பாதுகாப்பு படையினரால் தொடர்ந்து வன்முறைக்குட்படுத்தப்பட்டதை மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

மன்னிப்புச்சபை தெரிவித்த இக் குற்றச்சாட்டை இலங்கை பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் திரு சரத் கருணாரத்தின மறுத்திருந்தார்.

மன்னார் ஆயர் அருட்திரு ஜோசப் அடிகள் குற்றஞ்சுமத்தியிருந்தபடி, பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எவரும் மன்னாரில் பலாத்கார சம்பவம் எதிலும் ஈடுபடவில்லை என்று திரு கருணரத்தின தெரிவித்திருந்தார்.

உயர் பதவியிலுள்ளவர்களது இத்தகைய பொருதலான அறிக்கைகளும், போரைத் தொடர அரசு கொண்டுள்ள உறுதியும் நிராயுதபாணிகளான தமிழர்கள் மீது, குறிப்பாக பெண்கள்மீது, பலாத்காரம், சித்திரவதை போன்ற கொடுரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட பெரிதும் துணையாகின்றன என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு இரா. சம்பந்தன் திருமதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழர் ஒருவர் அகப்பட்டுவிட்டால் அவர்மீது எத்தகைய குற்றச் செயலையும் புரியலாம் என்றே சில படை வீரர்கள் எண்ணுகிறார்கள் என்றும் திரு சம்பந்தன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

மார்ச் 19ஆம் தேதி இரவு திருமதி சிவமணி அர்ச்சுனன், திருமதி விஜயகலா நற்குணம் ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டு, இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 5 மணி வரை பல்வேறு படை வீரர்களாலும் பொலிசாரினாலும் பலத்காரத்துக்குள்ளாக்கப்பட்டு அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் சென்று அவர்களைப் பார்வையிட்ட ஆயர் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். திருமதி சிவமணி அர்ச்சுனன் மூன்று பிள்ளைகளின் தாயார் ஆவார்.


ATOL 3782

SKY WINGS LTD

WORLD WIDE TRAVEL AGENTS

Tel: 020-8672 9111(12 lines)
Fax: 020-8672 0951
Mobile: 0850 876921

IATA

INSTANT TICKETING 24HRS

MAIN AGENT FOR

KUWAIT AIRWAYS

AIR-INDIA

ROYAL JORDANIAN الملكية الأردنية

SriLankan

Sky Wings fly 7 days to Colombo with Srilankan Airlines

Call: Bala or Dash

Web: www.skywings.co.uk

TOOTING BROADWAY

119 Tooting High Street
London SW17 0SY

Open 7 days a week

©Transnews



இரத்தினம் நகைமாளிகை

நியூமோல்டன்

தலைநகரின் தலைசிறந்த தமிழர் நகைமாளிகை

RATNAM JEWELLERS

84 BURLINGTON ROAD, NEW MALDEN

TEL: 020-8942 5670

அஞ்சல் சிறுவிளம்பரம்

020-8426 4567
Fax
020-8423 0393

## நன்றி நவிலல்



## அமரர் சுப்பிரமணியம் யோகராசா

தோற்றம்: 29.09.1949 மறைவு: 20.02.2001

எங்கள் குடும்ப ஜோதி அமரர் சுப்பிரமணியம் யோகராசா அவர்களின் திடீர் மறைவின்போது எமது ஆறாத்துயரில் பங்குகொண்டு ஆறுதல் தெரிவித்தவர்கள், பல்வேறு உதவிகள் புரிந்தவர்கள், ஈமக் கிரியைகளிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

168 Morland Road
Croydon
Surrey CR0 6NE
Tel: 020-8654 1381

சாந்தினி (மனைவி)
செந்தீசன் (மகன்)
ஸ்ரீராஜசிங்கம் (சகோதரர்)

ரூட்டிங்,
அருள்மிகு முத்துமாரி அம்மன்
ஆலய நுழைவாயிலில்...

ஆங்கிலம் – தமிழ் 'லிவ்கோ' அகராதி (பெரிது) £6.00
ஸேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம் £6.00

பிரபல எழுத்தாளர் ரமணிச்சந்திரன் எழுதிய 75 நூல்கள்
3 நூல்கள் 5 பவுண்கள் மட்டுமே

திருமுருகன்
அறிவகம்

நல்ல தமிழ் நூல்கள் விற்பனைசெய்வோர்

180 - 186 Upper Tooting Road
Tooting,
London SW17 7EW
Tel: 020-8672 0738 / 020-8648 7601

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு லண்டனில் வசிக்கும், A/L CIMA பயின்று வேலைபார்க்கும் 30 வயது சகோதரிக்கு, இங்கிலாந்தில் நிரந்தர வதிவுரிமை கொண்ட வேலைபார்க்கும் பட்டதாரி மணமகனைத் தேடுகிறார் அண்ணன்

தொடர்புகொள்ளவும்:
07950 615788
Email: Kanagasingammurali@hotmail.com

## வீடு விற்பனைக்கு

கொழும்பு, வெள்ளவத்தையில்
சகல வசதிகளுடனுமான
இரண்டு படுக்கை அறைகளைக்கொண்ட
நவீன தொடர்மாடி வீடு
விற்பனைக்கு உண்டு

விபரங்களுக்கு
தொடர்புகொள்ளவும்

Tel: 020-8933 3498

## சேவை

Video Filming & Editing

- திருமணம்
- பிறந்தநாள்
- பூப்பு நீராட்டு

உங்கள் மங்கள வைபவங்களை தரமான, நவீன தொழில்நுட்ப முறையில் படம் பிடித்திடவும்,
உங்கள் கமராக்கள்மூலம் படமாக்கப்பட்ட நிகழ்ச்சிகளை தரமான முறையில் எடிட்டிங் செய்து பதிவு செய்திடவும்அழையுங்கள்

ஜெகன் - நாதன்
J S VIDEO
020-8423 5585 OR 07900 251099
(HARROW)

உங்கள் விளம்பரங்களுக்கு
தொடர்புகொள்ளுங்கள்
Tel: 020-8426 4567
Fax: 020-8423 0393



அழகிய டிசைன்களில்
சாறி பிளவ்ஸ் தைப்பதற்கு
ஞாபகத்தில் இருக்கவேண்டிய
ஒரே இடம்

ரூட்டிங்கில் தரமிகு ஜவுளி மாளிகை

Rani FASHION DESIGN & TAILORING

காஞ்சிபுரம், பனாறஸ், கோலம், கௌரி இன்னும் பல புதுப்புதுச் சேலைகள்!
கூறைச் சேலைகள், பிளவ்ஸ் துணிகள், சல்வார் கமிஸ், குழந்தைகளுக்கான ரெடிமேட் ஆடைகள், வைபவ அணிகள்!

எம்மிடம் புடவைகள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் 24 மணி நேரத்தில் சாறி பிளவுஸ்
இலவசமாக தைத்துக் கொடுக்கப்படும்

33 UPPER TOOTING ROAD, LONDON SW17 7TR
TEL: 020-8767 8081 FAX: 020-8767 3784



## உன்னிகிருஷ்ணன் கச்சேரி



யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் பிரபல கருநாடக இசைக் கலைஞர் உன்னி கிருஷ்ணன் அளிக்கும் இசைக் கச்சேரி இம்மாதம் 22ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு ஹெய்ஸ், பெக் தியேட்டரில் நடைபெறுகிறது.

திரு பாலு ரகுராமன் - வயலின்;
திரு எம். பாலசந்தர் - மிருதங்கம்;
திரு ஆர். என். பிரகாஷ் - கடம்.


தொடர்புகளுக்கு: 020-7386 0924

## வயலின் அரங்கேற்றம்

சங்கீதவித்வான் திருமதி கலைவாணி இந்திரகுமாரின் மாணவிகளான செல்விகள் இந்திராதேவி, சந்திராதேவி குணசேகரன் சகோதரிகளின் வயலின் அரங்கேற்றம் இம்மாதம் 21ஆம் தேதி சனி மாலை 6 மணிக்கு வூட்போர்ட், சேர் ஜேம்ஸ் கௌக்கி மண்டபத்தில் நடைபெறுகிறது.

றெட்பிரிட்ஜ், இல்போர்டைச் சேர்ந்த குணசேகரன் தம்பதியரின் புதல்விகள் இவர்கள். டாக்டர் திருமதி சாரதா நம்பி ஆரூரன் தலைமையில் இவ்வரங்கேற்றம் நடைபெறுகிறது.

# ஜெனிவாவில் 10 ஆயிரம் தமிழர் ஆர்ப்பாட்ட பேரணி



ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கட்டடத்தின் முன்பாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் திரண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த இலங்கை அரசாங்கம்மீது சர்வதேச நெருக்குதலை ஏற்படுத்தவும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவும் கோரி ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நிகழ்த்தினார்கள்.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 57ஆவது கூட்டத்தொடருடன் தொடர்பாக நடைபெற்ற இப் பேரணியில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் இவர்கள் கலந்துகொண்டார்கள்.

இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தை அநுசரிக்கவும் இராணுவ கட்டுப்பாட்டிலல்லாத இடங்களில் உள்ள பொருளாதாரத் தடையை நீக்கவும் இவர்கள் கோரினர்.

பேரணியின் இறுதியில், தமிழர் தாயகத்தை உள்ளடக்கி, அவர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டும் என்ற தீர்மானம் வெளியிடப்பட்டது. தீர்மானத்தில், பிரிட்டனின் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பும் சேர்க்கப்பட்டமை குறித்த விசனமும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் அதன் பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டு, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, நோர்வேயின் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான சுமுகநிலையை உருவாக்கவேண்டும் என்றும் இவர்கள் கோரினார்கள்.

## அரசு - புலிகள் உடன்படிக்கை கைச்சாத்து!

வன்னி பிராந்தியத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் விதத்தில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே முக்கிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தாகியிருப்பதாக 'யுஎன்ஐ' செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. பதிலாக, கொழும்பில் குழப்ப நடவடிக்கைகள் எதிலும் புலிகள் ஈடுபடமாட்டா என்றும் வெளிநாட்டமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கும் புலிகளுக்குடையிலான பரஸ்பர புரிந்துணர்வு காரணமான இம் மனிதாபிமான உதவிகள் எவ்வேளையிலும் ஆரம்பிக்கப்படலாமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை, பேச்சுவார்த்தைக்கான ஒரு முன் நிபந்தனை அல்ல என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வன்னி பகுதியில் அரசு பொருளாதார தடையை விதிக்கிறது என்ற புலிகளின் கூற்றை இதுவரை காலமும் ஏற்காது மறுத்துவந்த திரு கதிர்காமரின் இந்த அறிவிப்பு பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

## குறொய்டனில் கலைவிழா

தெற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை கலைவிழா ஏப்ரல் 8ஆம் தேதி மாலை 6 மணிக்கு குறொய்டன், அஷ்குரொப் தியேட்டரில் நடைபெறுகிறது.

திருமதி ஞானதீபம் சிவபாதசுந்தரம் தயாரித்து அளிக்கும் 'தென்னவன் பிரம்மராயன்' நாடகம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறுகிறது.

## அம்மன் திருவிழா

லண்டன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய ஐந்தாம் ஆண்டு சித்திரா பௌர்ணமி மகோற்சவம் ஏப்ரல் 22ஆம் தேதி ஆரம்பித்து மே 12ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 23ஆம் தேதி கொடியேற்றமும் மே 6ஆம் தேதி தேர்த் திருவிழாவும் நடைபெறும்.


ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
9ஆவது ஆண்டாக நடாத்தும்
'கானக்குயில் - 2001'
திரைப்பட பாடல் போட்டி

30. 06. 2001
சனி மாலை 6 மணி

LOGAN HALL
BEDFORD WAY
LONDON WC1

- போட்டியில் 16 வயது முதல் 40 வயது வரையிலான ஆண்களும் பெண்களும் கலந்துகொள்ளலாம்.
- ஒலி நாடா ஒன்றில், போட்டியில் நீங்கள் பாடவிரும்பும் பாடலை இசையின்றி பாடி ஒலிப்பதிவு செய்து, ஏப்ரல் 12ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள்.
- உங்களின் பிறந்த தேதி, முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றோடு, நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் பாடவிரும்பும் இரு திரைப்படப் பாடல்கள் ஆகிய விபரங்களைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.
- 'சிரேஷ்ட கானக்குயில்' தெரிவும் அன்று இடம்பெறும். 40 வயதுக்கு மேற்பட்டோர் இதில் பங்குபற்றலாம்.
- ரசிகர்களின் தீர்ப்பே இறுதியானது.

உங்கள் ஒலிப்பதிவு நாடாவை அனுப்பவேண்டிய முகவரி:

Mrs Yoga Thillainathan
`Kanakkuyil 2001'
82 Vicarage Farm Road
Heston
Hounslow
TW5 0AE




Tel: 020-8577 5525 Fax: 020-8577 5525



# சிவயோகம்

## அருள்மிகு லண்டன் முத்துமாரி அம்மன் கோவில்

180/186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020-8767 9881 Fax: 020-8767 2337



# முத்தமிழ் விழா - 2001

## 21.04.2001 சனிக்கிழமை

காலை 9.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை

## சிவயோக கலை அரங்கம்

லண்டன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

### காலை நிகழ்ச்சிகள் - மு. ப. 9.30

மங்கல விளக்கேற்றல்
தமிழ் வாழ்த்து: திருமதி மாதினி சிறிக்கந்தராசா
தாயக வணக்கம்
ஆரம்ப உரை: திரு நா. சீவரத்தினம் (தலைவர், சிவயோகம் அறங்காவலர் சபை)
பண்ணிசை: செல்விகள் தேனுகா, பிராமி ஜெகதீஸ்வரம்பிள்ளை
போட்டிகளில் வெற்றிபெற்ற முதற் பரிசாளர்களின் பேச்சு
சிறப்புரை: 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகன் (ஈழத்து சைவ தமிழ் அறிஞர்)
பண்ணிசை நிகழ்வுகள்
குரலிசை: செல்வன் நவீன் இராஜேந்திரன், செல்வி இலட்சுமி நமச்சிவாயம்
திருமதி மாதினி சிறிக்கந்தராசாவின் மாணவிகள்)
**சிவயோகம் மலர் வெளியீடு**
**மதிய விருந்து**

### மாலை நிகழ்ச்சிகள் - பி. ப. 3.00

தலைமை உரை: திரு வ. இ. இராமநாதன்
போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கல்
வில்லிசை: விவேக் குழுவினரின், 'இறைவன் இருக்கின்றான்'

கவியரங்கம்: 'ஆறுமோ எமது ஆவல்'
தலைமை: புலவர் இளவாலை அமுது
கலாநிதி ஜெயநாதன், கலாநிதி பாலபாஸ்கரன், திரு செ. சிறிக்கந்தராசா, திரு பா. வை. ஜெயபாலன்
பட்டி மன்றம்: புலம்பெயர் நாட்டில் இயங்கும் ஊடகங்கள் நம் இனத்துக்கு நன்மை பயக்கும் சேவையை நல்குகின்றனவா?
தலைமை: திரு க. ஜெகதீஸ்வரம்பிள்ளை
திரு க. இராஜமனோகரன் - திரு சு. சிறீகாந்தலிங்கம்
திரு சிவ. தணிகாசலம் - திரு கவி வீரவாகு

### கௌரவ விருது வழங்கல்

| கௌரவிக்கப்பெறுவோர் | சாதனைகள் பகர்வோர் |
|---|---|
| 'ஏழிசை மாமணி' திருமதி சரஸ்வதி பாக்கியராசா | கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் |
| திரு சின்னப்பு மகரசிங்கம் | திரு சின்னையா பாலசுந்தரம் |

போட்டியில் பரிசுபெற்ற கிராமிய நடனம், சம்பாஷணை ஆகிய நிகழ்வுகள்
நடனம்: செல்வன் செந்தூரன் இராஜமனோகரன், செல்விகள் சிவகாமி, அபிராமி இராஜமனோகரன் (கலாபாரத் நடனாலய மாணவர்கள்)
நடனம்: செல்வி ஜனனி தெய்வேந்திரன் (ஜேர்மனி, செல்வி பவித்திரா ஜெயக்குமாரின் மாணவி)
நாடகம்: 'ஒற்றுமை' - தயாரிப்பு: திருமதி மாலதி பிரபாகரன்
வயலின் இசை: செல்வன் கஜன் உருத்திரகுமார்
சிறப்புரை: திரு அறிவுமதி (என். சி. கே. மதியழகன்)
(தமிழகத்தின் தலைசிறந்த கவிஞரும் பேச்சாளரும்)
அபிநய நடனம்: தயாரிப்பு - திருமதி வள்ளி சர்வானந்தா
நாட்டிய நாடகம்: தயாரிப்பு - திருமதி சுபத்திரா சாந்தீபன்
நாடகம்: லண்டன் தமிழ் நிலையம் வழங்கும் 'பூலோகம் போய்வருவோமா?'
தயாரிப்பு - செல்வி செல்வமணி வடிவேலு
நன்றியுரை: திரு நா. கருணாநிதி (அறங்காவலர்)

(நுழைவு அனுமதி இலவசம்)

அருள்மிகு லண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோவில்
[illegible] சித்திரைப் பௌர்ணமி மகோற்சவம் 22.04.01 தொடக்கம் 12.05.01 வரை
நடைபெறுகிறது
[illegible] 23ஆம் தேதி திங்கட் கிழமை - கொடியேற்றம்
மே 06ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை - தேர்
மே 07ஆம் தேதி திங்கட் கிழமை - தீர்த்தம்
மே 10ஆம் தேதி வியாழக் கிழமை - ஊஞ்சல்
மே 11ஆம் தேதி வெள்ளிக்கிழமை - பூங்காவனம்
தினமும் மாலை 7 மணிமுதல் 8 மணிவரை 'செஞ்சொல் செல்வர்' ஆறு. திருமுருகனின்
ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறும்

### நிதிநிலைச் செயற்பாட்டறிக்கை

| வரவு - செலவு | வருடம் 1 முடிவு 31.03.97 | வருடம் 1 முடிவு 31.03.97 | வருடம் 1 முடிவு 31.03.97 | வருடம் 1 முடிவு 31.03.97 |
|---|---|---|---|---|
| வருமான வளங்கள் | | | | |
| நன்கொடைகள் | 39, 802 | 23,839 | 27,146 | 25,421 |
| தன்னிச்சைக் காணிக்கைகள் | 6,371 | 7,527 | 9,368 | 11,971 |
| கோவில் பணிகள் | 51,360 | 70,957 | 90,535 | 111,940 |
| மண்டப வாடகை | 14,183 | 28,350 | 45,600 | 44,540 |
| மறு வரவுகள் | 3,948 | 3,940 | 582 | 446 |
| மொத்தம் | 115,664 | 134,613 | 173,231 | 194,318 |
| செலவான வளங்கள் | | | | |
| நேரடி தர்ம செலவினங்கள் | | | | |
| கட்டிட வாடகை, பாராமரிப்பு | 24,824 | 42,003 | 44,290 | 41,325 |
| நீர் | 580 | 2,606 | 321 | 638 |
| வெளிச்சம், வெப்பமூட்டல் | 3,072 | 3,561 | 3,945 | 6,132 |
| பராமரித்தல், புதுப்பித்தல் | 50,576 | 20,084 | 14,402 | 27,947 |
| சுத்தம் செய்தல் | 2,279 | 1,468 | 3,837 | 3,931 |
| தொலைபேசி, காப்புறுதி | 1,981 | 1,270 | 2,338 | 2,378 |
| அச்சிடுதல், தபால், பணிமனை பொருள்கள் | 2,423 | 2,563 | 2,521 | 6,608 |
| பூசை பொருள்கள் | 20,626 | 19,876 | 16,650 | 21,067 |
| ஊதியம், தேசிய காப்புறுதி | 6,153 | 9,919 | 13,853 | 21,762 |
| போக்குவரத்து, | | | | |
| பொருள்கள் இறக்குமதிச் செலவு | 1,445 | 3,864 | 2,934 | 5,808 |
| | 1,483 | 1,896 | 5,546 | 15,146 |
| மறுசெலவினம் | 2,847 | 3,732 | 5,871 | 771 |
| தேய்மானம் | 10,080 | 11,161 | 13,939 | 17,145 |
| நிர்வாக செலவினம் | 1,880 | 2,920 | 2,909 | 3,011 |
| மொத்தம் | 130,249 | 126,923 | 133,356 | 173,668 |
| எஞ்சிய வளங்கள் | -14,585 | 7,6903 | 9,875 | 20,649 |
| முன் கொண்டுவரப்பட்ட நிதியம் | 0 | -14,585 | -6,895 | 32,980 |
| முன் எடுத்துச் செல்லப்படும் நிதியம் | -14,585 | -6,895 | 32,980 | 53,629 |

| | 31.03.97 | 31.03.98 | 31.03.99 | 31.03.00 |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | | | | |
| கொள்வனவு விலை | 84,822 | 106,356 | 137,070 | 180,473 |
| தேய்மானம் போக | 10,280 | 21,620 | 35,721 | 52,010 |
| | 74,542 | 84,736 | 101,349 | 128,463 |
| நிலையற்ற சொத்துக்களும், | | | | |
| நிலையற்ற கொடுப்பனவுகளும் | -9,370 | -20,476 | -19,669 | -35,731 |
| ஒரு வருடத்தின் பின் | | | | |
| கொடுக்கவேண்டிய கடன்கள் | -79,757 | 71,155 | -48,700 | -39,103 |
| எஞ்சிய (தேர்ந்த) சொத்துக்கள் | -14,585 | -6,895 | 32,980 | 53,629 |
| நிதியங்கள் | -14,585 | -6,895 | 32,980 | 53,629 |
| ஊழியர்களின் எண்ணிக்கை (சராசரி) | 2 | 3 | 3 | 5 |

### ஆலயக் கட்டடம் வாங்குவதற்காக நன்கொடை - வட்டியில்லாக் கடன் வழங்கியவர்கள்

(50 மற்றும் 50 பவுண்களுக்கு மேல் அளித்தவர்கள்)

| | | | |
|---|---|---|---|
| திரு திருமதி மூர்த்தி | 1001.00 | திரு வேந்தன் | 100.00 |
| திரு ஆனந்ததியாகர் | 1000.00 | திரு கமலநாதன் | 100.00 |
| திரு திருமதி சிறிக்கந்தராசா | 1000.00 | திரு சண்முகவடிவேல் | 100.00 |
| டாக்டர் சச்சி | 1000.00 | டாக்டர் பாலேந்திரன் | 100.00 |
| திரு திருமதி மகேந்திரராசா | 600.00 | திரு திருமதி சிவஞானம் | 100.00 |
| டாக்டர் சொர்ணலிங்கம் | 500.00 | திரு ஜகந்தன் | 85.00 |
| டாக்டர் ஜெயந்திரன் | 500.00 | திரு சிறிக்கந்தராசா | 50.00 |
| திரு நாகேஸ்வரன் | 500.00 | திரு முரளிதரக்குருக்கள் | 50.00 |
| திரு ராஜரட்ணம் | 200.00 | திரு வாசன் | 50.00 |
| திரு ராஜரூபன் | 200.00 | திரு கரி- | 50.00 |
| திரு விவேகானந்தா | 200.00 | திரு சிறி | 50.00 |
| திரு பாலச்சந்தர்பிள்ளை | 108.00 | திரு வரதன் | 50.00 |
| திரு சூரியகுமார் | 101.00 | செல்வி சுலோசனா | 50.00 |
| திரு சஞ்சய் விஜயநாதன் | 100.00 | திரு சிவகுருநாதன் | 50.00 |
| திரு ஆனந் | 100.00 | திரு சிவஞானசேகரன் | 50.00 |
| திரு நடராசா | 100.00 | திருமதி யோகேஸ்வரன் | 50.00 |
| திரு கிருபாகரன் | 100.00 | திரு கரன் குடும்பம் | 50.00 |
| திரு கேதீஸ்வரன் | 100.00 | திரு ஆனந்தராசா | 50.00 |
| திரு ராஜேந்திரன் | 100.00 | திரு சிறி | 50.00 |
| திரு ஞானவேல் | 100.00 | திரு ஜெகநாதபிள்ளை | 50.00 |

பெயர் கொடுக்க விரும்பாதவர்கள் 3,000.00
50 பவுணுக்குக் குறைவான நன்கொடை வகையில் 770.00
22.01.01 முதல் 28.02.01 வரை மொத்த தொகை 12,665.00
28.02.01 வரை மொத்த தொகை 103,572.00

## Tividale Tirupathi Balaji Temple

*Shri Venkateswara (Balaji) Temple of the United Kingdom, Dudley Road East, Tividale, Oldbury, West Midlands B69 3DU*
*Tel: 0121-544 2256 Fax: 0121-544 2257*
*Registered Charity No. 1075451*

பிரபல தென்னிந்திய சினிமா நட்சத்திரம்
**சுகன்யா**
அவரது சகோதரி
**கீதா ஸ்ரீதர்**
ஆகியோர் அளிக்கும்
**நாட்டிய நிகழ்ச்சி**





**Saturday**
**19 May 2001**
**at 3.00 pm**

Kings Hall
Civic Centre
Glebe Street
Stoke on Trent
ST4 7TG
Tel: 01782-232631
Tickets:
Adult - £20.00 / £15.00
Child - £10.00 (6-16yrs)

**For Tickets and further information**
Temple Office
0121-544 2256
OR
Sashikala
0777 9574648 (Mobile)

*All proceed go to Balaji Temple Project*

## றோயல் ஜுவலறி

SML

○ நம்பிக்கை
○ உயர் தரம்
○ மாசு மறு அற்றஅழகு



இது,
றோயல் ஜுவலறி
தரும்
தங்க நகைகள்

**ROYAL JEWELRY**

**287 HIGH STREET NORTH**
**EASTHAM, LONDON E12 6SL**
**Tel: 0208-472 5500 Fax: 0208-472 5687**

## TIME TRAVEL & TOURS

APPOINTED AGENT FOR

SriLankan Airlines

ROYAL JORDANIAN
الملكية الأردنية

AND FOR MANY OTHER MAJOR AIRLINES

Colombo
**£440**
free flight to south India

Singapore, Kuala Lumpur,
**£365**

Toronto
**£241**

Colombo return with a fantastic fare
**£289**

## Time Travel & Tours

ATOL 74585

136 KENTON ROAD,
HARROW, MIDDLESEX HA3 8AZ
Tel: 020-8907 6969

374 HIGH STREET NORTH
EASTHAM, LONDON E12 6PH
Tel: 020-8552 5522

IATA

Fax: 020-8548 8400

# EASTHAM (EHA) ACCESS - ESTATE AGENTS

## Mortgage and Finance Solutions

(Subscribers to MCCB & NACFB)

விரிவடையும்
சேவையில்
புதிய இடத்தில்
நாம்....

- வீடுகள்
- வர்த்தக நிறுவனங்கள்
- காப்புறுதி

ஆகிய
உங்கள் தேவைகளுக்கு
ஒரு நிறுவனம்

**MORTGAGES**

HOUSE PURCHASES ( Status & Non-status)
RE-MORTGAGES
BUYING OF RENT OUT PROPERTIES
INVESTMENT ARRANGEMENTS ON SEMI-COMMERCIAL PROPERTIES

•

**LOANS**

QUICK LOANS FOR HOMEOWNERS
VENTURE CAPITALS AND FACTORING SERVICES
ARRANGEMENT TO PURCHASE EXISTING SHOPS
LEASE ARRANGEMENT (more than 15 years)

•

**INSURANCES**

LIFE, MORTGAGE PROTECTION ETC.
BUILDING AND CONTENTS

Estate Agents
Property Sales
Management &
Property Consultants

**We are in the High Street now...**

பல்வேறு கடன் வழங்கு நிறுவனங்களுக்கு ஏற்றவிதத்தில் உங்கள் விண்ணப்பங்களை கவனமாக தயார் செய்தல் அல்லது உங்களுக்கு அமைவானவிதத்தில் பொருத்தமான நிறுவனத்தை கண்டுபிடித்தலே எம்முடைய பெரு வெற்றியாகும்

ООО

வீட்டுக்கடன் சேவை கணிசமான திருப்தியை அளித்தாலும் வாடிக்கையாளர்களுக்கு உகந்த ஆலோசனைகளிலும் அவர்களின் நிலைமைகளுக்கேற்ற வீடுகளைத் தேர்வதிலும் பெரும் சிரமங்கள் ஏற்படுவதை நாம் உணர்ந்தோம். இப்பொழுது இவர்களுக்கு நாம் ஓரளவு சேவையாற்றக்கூடிய விதத்தில் உள்ளோம். ஈஸ்ற்ஹாம், வோல்தம்ஸ்ரோ, இல்போர்ட் ஆகிய இடங்களில் விற்பனைக்கு எம்மிடம் வீடுகள் உள்ளபோது, மற்றுமிடங்களிலும் எமக்கு வீடுகள் தேவைப்படுகின்றன.

ООО

15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குத்தகை ஒப்பந்தத்தைக்கொண்ட வர்த்தக சொத்துக்களுக்கு 85 வீதம் வரை நாம் கடன் உதவி பெற்றுக் கொடுக்கிறோம்

ООО

தற்போதைய புதிய முதலீடான வாடகைச் சொத்துகள் முதலீட்டிலும் முதலீட்டாளர்களுக்கு நாமே அவற்றை கட்டணமெதுவுமின்றி நிர்வகித்து உயர் மட்ட வருமானத்துக்கு உறுதி செய்கிறோம்

**Mortgages** - Constant research and systematic preparation of application with available informations in line with various lender's requirements. OR finding a suitable lender in line with the customer's circumstances is the most crucial aspects. Our success rate both (status and non-status) are 99% - this reflects our ability to negotiate with suitable lenders..
Estate Agents - Eventhough we achieved considerable satisfaction of our mortgage services, we have been experiencing numerous difficulties to satisfy the customers who were in need of proper advice and houses in line with their circumstances.
This situation resulted number of our customers to incur unnecessary expenses. We are now in a position to provide a valuable service to these kind of customers. At present we have housed in Eastham, Walthamstow and Ilford and still we are in need of houses for some waiting customers.

**Commercial Properties** - This is one of our achievements that we proudly announce. Securing loans up to 85% ltv on semi-commercial properties and arranging against lease (more than 15 years) are well under way.

**Property Renting** - Buy to let properties are our new venture too. We do not charge any fees on investors who are willing to invest on properties and ourselves will manage the property. A reasonable monthly return on the investment, which is above the normal level of income, is guaranteed.

The ongoing rate of interest:

- Fixed rate from 3.85 - 6.49%
- Discount rates 5.74% for 2 years
- Flexible mortgages 6.45 - 6.99%
- Buy to let 6.25 - 7.7%
- Self-certification 5.95 - 6.75% (salaried persons only the status required / Self employed - accountant's letter)
- Adverse (non-status) 6.99 - 8.74% (depending in line with credit status - information recorded)

(Your home is at risk if you do not keep repayment on a mortgage or other loan secured on it)

## EASTHAM (EHA) ACCESS - ESTATE AGENTS

317B High Street North, Manor Park, London E12 6SL
Tel: 020-8586 7856 Fax: 020-8586 7859
After Office Hours: 020-8471 3294

ஏப்ரல் 01 – 14, 2001 அஞ்சல்



# நடராஜருக்குப் பிறகு நடனத்துக்கென்று ஒருவர் ...?

## ஒரு பத்திரிகை ஆசிரியரின் அநுபவம்

பம்பாய், 'இல்லஸ்றேற்றட் வீக்லி' ஆசிரியராகவிருந்த ஏ. எஸ். ராமன், புகழ்பெற்ற ஒரு பத்திரிகை ஆசிரியர்.
'வீக்லி ராமன்' என்று பெயர்பெற்ற அவரது பத்திரிகை அநுபவங்கள், 'வீக்லி ராமன் பார்வையில்....' என்ற நூலாக வெளிவந்தது. அதிலிருந்து சில பகுதிகளை வாசகர்களுக்கு அவ்வப்போது தருகிறோம்.
ஆ–ர்.

'இல்லஸ்றேற்றட் வீக்லி'யின் ஆசிரியப் பொறுப்பை நான் ஏற்றதும் அப் பத்திரிகையில் பலவிதமான இந்திய அம்சங்களை அறிமுகப்படுத்தினேன். வேட்டையாடுதல், புலிகளைச் சுட்டு வீழ்த்தும் சாகசச் செயல்கள் போன்ற ஆங்கிலத் தனமான விளையாட்டுக்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்த 'வீக்லி'யில் நமது ஆன்மீக சமாச்சாரங்கள் வெளிவர ஆரம்பித்தபோது இந்த மாற்றத்துக்காகவே காத்திருந்தது மாதிரி வாசகர்கள் பெருமளவில் வரவேற்றார்கள்.

பெருமைமிக்க நமது கலைப் பாரம்பரியத்தைப் பற்றியும் நான் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தேன். குறிப்பாக நடனம். சாஸ்திரிய நடனக் கலையில் அனைத்துப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய கட்டுரைகள். இவை பெரும் பாராட்டைப் பெற்றன. குறிப்பாக நடனத்தால், தான் மேன்மையுற்றது மட்டுமன்றி, தன்னால் நடனக் கலையையும் மேன்மையுறச் செய்த அற்புதமான கலைஞர்களைப்பற்றிய கட்டுரைகளை நிறையப் பிரசுரித்தேன். இந்தத் தொடர் அம்சத்தில் எந்தெந்தக் கலைஞர்களைப் பற்றி எழுதுவது என்பதற்கு எனக்கு நானே ஒரு விதிமுறையை வகுத்துக்கொண்டு, எக்காரணம் கொண்டும் அதை மீறாமல் செயல்பட்டு வந்தேன்.

இந்தப் பகுதியில் இடம் பெறுகிறவர்கள் நடனக் கலையோடு தன் ஆத்மாவையே அந்தரங்க சுத்தியுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டவர்களாக - கலை, கலை என்ற ஒரே பிரக்ஞையோடு நடனத்தை ஒரு தவமாக மதித்து வருபவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் நான் வகுத்துக்கொண்ட விதி.

குமாரி கமலா முதல் நடனக் கலையின் பெருமைமிக்க பலரைப் பற்றியும் நடுநிலையோடு எழுதப்பட்ட விமரிசனக் கட்டுரைகளை ஒவ்வொன்றாக நான் இந்தப் பகுதியில் வெளியிட்டு வந்தேன்.

வைஜயந்திமாலா அப்போது திரைவானின் உச்சியில் மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரமாக அகில இந்திய புகழோடு பவனி வந்துகொண்டிருந்த காலம். 'வீக்லி'யின் இந்தக் கலைப் பகுதியில், தன்னைப் பற்றிய கட்டுரை வெளிவர வேண்டும் என்று அவர் நியாயமாகவே ஆசைப்பட்டிருக்கக்கூடும். எனக்கு நேரிடையாக இது பற்றி அவரிடமிருந்து ஏதும் தகவல் இல்லையென்றாலும் பலர் அவருக்காகப் பரிந்துரை செய்ய ஆரம்பித்தார்கள்.

குறிப்பாகச் சொல்வதென்றால், பி. கே. ராய் அவர்கள். 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'வின் ஜெனரல் மனேஜர். டைம்ஸ் ஆஃப் இந்தியா நடத்திவந்த பத்திரிகைகளின் ஆசிரியர்கள் அனைவரும் பம்பாயில் தினமும் ஒன்றாக பகல் உணவு அருந்துவது ஒரு சம்பிரதாயமாக இருந்தது. அந்தக் குரூப்பின் உயர் அதிகாரிகளும் எங்களோடு சேர்ந்து கொள்வார்கள். பேச்சு வாக்கில், 'வைஜயந்திமாலா ஒரு நாட்டிய மணிதானே, அவரைப் பற்றியும் கட்டுரை வெளியிடலாமே' என்று அடிக்கடி ராய் குறிப்பிட ஆரம்பித்தார். 'ஃபிலிம் ஃபேர்' பத்திரிகையின் புகழ்பெற்ற ஆசிரியர் பி. கே. கரஞ்சியாவும், 'ஃபெமினா'வின் ஆசிரியர் ஜங்கியானியுங்கூட இப்படி வைஜயந்திமாலாவை சிபாரிசு பண்ணிய துண்டு.

நான் சொன்னேன்: "இந்தப் பகுதிக்காக வைக்கப்பட்டுள்ள சில விதிமுறைகளுக்குள் அடங்கும் எந்தக் கலைஞரையும் நாங்கள் எழுதாமல் விடமாட்டோம்''

வைஜயந்திமாலாவின் நடன ஆற்றலில் யாருக்கும் இரண்டு கருத்து இருப்பதற்கில்லை. ஆனால், அவரது கவனம் முழுவதும் சினிமாவின்மீதே இருந்ததால் அவரிடமிருந்த நடனம் என்ற அற்புதமான கலை தனது பல்வேறு பரிமாணங்களை மேலும் பக்குவப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை இழந்துபோயிற்று என்று கருதியவர்களில் நானும் ஒருவன். எனவே, வீக்லியின் அந்தப் பகுதிக்கு அவர் பொருந்தி வருவாரா என்ற சந்தேகம் என்னுள் இருந்து வந்தது.

பி. கே. ராய் அவர்களோ வைஜயந்திமாலாவைப் பற்றிய கட்டுரை வந்தே ஆகவேண்டும் என்பதில் மும்முரமான அக்கறை காட்டினார். அவர் கம்பனியின் பொது மேலாளர் என்ற முறையில் அவரது கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதுதான் என்றாலும், பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் நான் சில கோட்பாடுகளிலிருந்து வழுவி இறங்கி வந்து யாரையும் திருப்திப்படுத்தத் தயாராக இல்லை. அத் தொடர் அம்சத்துக்காக நான் போட்டு வைத்திருந்த கலைஞர்களின் பட்டியல் முடிந்ததும் பொதுவாக சில குறிப்பிடத்தகுந்த கலைஞர்களை எழுத ஆரம்பிக்கும்போது வைஜயந்திமாலாவைப் பற்றிய கட்டுரையையும் நிச்சயம் வெளியிடுவது என்ற முடிவில் நான் இருந்தேன்.

நான் அடிக்கடி பயணம் போய்க்கொண்டிருந்தவன். அப்படி ஒரு முறை நான் பம்பாயில் இல்லாமல் வெளியே இருந்தேன். அச்சமயம் பார்த்து பி. கே. ராய் வேறு ஓர் எழுத்தாளர் வைஜயந்திமாலா பற்றி எழுதியனுப்பிய கட்டுரையை ஓ. கே. செய்து உதவி ஆசிரியரிடம் தந்து, "இதை அடுத்த இதழில் வெளியிடுங்கள்; நான் ராமனிடம் பேசிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டார்.

என் கண்டிப்பு என் உதவி ஆசிரியர்களுக்கு தெரியுமாதலால் அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எனக்கு அடுத்தபடியில் இருந்த துணை ஆசிரியர் நான் இருந்த இடத்துக்கு போனில் பேசி விவரம் சொன்னார்.

எனக்கு கோபம் வந்தது. "அந்தக் கட்டுரையை அப்படியே வைத்திருங்கள். அதன் மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவேண்டாம். நான் வந்து பார்த்த பிறகு முடிவு செய்யலாம்'' என்றேன்.

நான் பம்பாய் திரும்பினேன். அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். எந்தவிதமான நடுநிலையுமின்றி, ஒருதலைப்பட்சமாக அக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. ஏதோ நடராஜருக்குப் பிறகு நடனத்துக்கென்று இருப்பவர் வைஜயந்திமாலாதான் என்பது போன்ற பிரமை தோன்றும் வகையில் அக் கட்டுரை இருந்தது. ஆனால், அக் கட்டுரையுடன் வந்திருந்த புகைப்படங்கள் பிரமாதமாக அமைந்திருந்தன.

"இக் கட்டுரையை பிரசுரிக்க மாட்டேன்'' என்று நான் ராயிடம்

**பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் நான் சில கோட்பாடுகளிலிருந்து வழுவி இறங்கி வந்து யாரையும் திருப்திப்படுத்த தயாராக இல்லை.**

பிடிவாதமாக மறுத்தேன்.

"அப்படியானால் நீங்களே தகுதியான ஒரு பத்திரிகையாளரை அனுப்பி கட்டுரை எழுதி வாங்குங்களேன்'' என்றார் ராய்.

நான் உதவி ஆசிரியர்களில் ஒருவரும், 'எஸ். வி. வி.' என்ற பெயரில் விமரிசனக் கட்டுரைகள் எழுதிவந்தவருமான எஸ். வி. வாசுதேவன் அவர்களைக் கூப்பிட்டு, அப்பணியைத் தந்தேன். புகைப்படங்களை மட்டும் அப்படியே பயன்படுத்திக் கொள்ள எண்ணியிருந்தேன்.

எஸ். வி. வி. மிக அருமையாக - நடுநிலையோடு கூடிய கட்டுரையை எழுதினார். அதில் அவர் வைஜயந்திமாலாவை 'ஓஹோ' என்று ஆகாயத்துக்கும் தூக்கவில்லை. அதள பாதாளத்துக்கும் தள்ளவில்லை. அக்கட்டுரை புகழ்ச்சி மாலையில்லை. அதே சமயம் இகழ்ச்சிக் கட்டுரையாகவும் அது இல்லை. வைஜயந்தியைப் பற்றிய பிரமாதமான விமரிசனமாக அது இருந்தது. 'வைஜயந்திமாலாவின் படவுலகப் பிரவேசம் திரையுலகுக்கு லாபம். கலையுலகுக்கு நஷ்டம்' என்று அவர் நியாயமாகக் குறிப்பிட்டிருந்தார்.

'வீக்லி'யில் இருந்த இக்கட்டுரையின் சாராம்சத்தை ராயின் காதுக்கு முக்கூட்டியே கொண்டு போனார்கள். வைஜயந்திமாலா பற்றிய எந்த விமரிசனமும் கட்டுரையில் இருப்பதை ராய் விரும்பவில்லை.

கட்டுரையை நான் ஓ. கே. செய்து அச்சுக்கு அனுப்பிவிட்டு வெளியூர் போனேன்.

இரண்டொரு நாளில் எனக்கு போனில் செய்தி வந்தது.

"கட்டுரை மெஷினில் ஓடிக் கொண்டிருந்தபோதே ராய் வந்து அதைத் தடுத்து நிறுத்தச்சொல்லி அந்தக் கட்டுரையை மட்டும் நீக்கியிருக்கிறார். என்ன செய்வதென்று தெரியவில்லை'' என்று என் உதவியாளர்களின் பதற்றக் குரல்.

நான் கோபத்தில் பொங்கினேன். ராயுடன் பேசினேன்.

"நீங்கள் செய்திருப்பது தவறான காரியம். பத்திரிகை ஆசிரியனின் சுதந்திரத்தை மட்டமாக எடை போட்டுவிட்ட காரியம். நான் இல்லாதபோது இப்படிச் செய்திருக்கக்கூடாது. வீணாக சிக்கலை உருவாக்கவேண்டாம் ராய்.''

நான் பம்பாய் திரும்பினேன். நாங்கள் விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தோம்.

"நான் விரைவில் வைஜயந்திமாலா பற்றி ஓர் அட்டைப்படக் கட்டுரையே பிரசுரிப்பேன். அதுவரை ராய் இந்த விஷயத்தில் எப்படியும் குறுக்கிடக்கூடாது.''

இந்த முடிவால் எஸ். வி. வி. எழுதிய கட்டுரையை நான் அப்போது விலக்கிக்கொண்டேன்.

என் வாக்கைக் காப்பாற்ற வேண்டுமே! மோகன் கோகரை அணுகினேன். கோகர் விமரிசன உலகின் ஜாம்பவான். அவர் பேனா எழுதினால் அந்த விமரிசனத்துக்கு அப்பீலே இருக்காது. அவ்வளவு ஆணித்தரம். இந்தியா முழுவதற்கும் அறிமுகமானவர். சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட சுகமான எழுத்துக்கள் அவருடையவை. அவரை அந்த அட்டைப்பட கட்டுரை எழுதச் சொன்னேன்.

எழுதினார். கண்கள் கட்டப்பட்ட நீதி தேவதையின் தராசு போன்று அக் கட்டுரை இருந்தது. எஸ். வி. வி.யின் கருத்துக்கள் கோகரிடமும் பிரதிபலித்தன. வைஜயந்திமாலா சினிமா, பரதம் இரண்டையும் வைத்துக்கொண்டிருப்பதை, ஒரே சமயத்தில் இரண்டு குதிரைகளின் மீது சவாரி செய்வதற்கு ஒப்பிட்டிருந்தார்.

மோகன் கோகரின் கட்டுரை உள்ளேயும், வைஜயந்திமாலாவின் வண்ணப்படம் 'வீக்லி'யின் அட்டையிலும் பிரசுரமாயின.

வைஜயந்திமாலாவுக்கு கட்டுரை எழுதப்பட்டருந்த விதம் பிடிக்கவில்லை. ராய்க்கு தன் அதிருப்தியை அவர் தெரிவிக்க, ராய் என்னிடம் அதைத் தவறாமல் பிரதிபலித்தார். பி. கே. கரஞ்சியாவும் அப்படியே தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தினார்.

அதைவிட சரியான கட்டுரையை யாரும் எழுதியிருக்க முடியாது என்பது என் திடமான எண்ணம். ஓரிரு நிமிடங்கள் திரையில் தோன்றி நடனமாடினால் போதும்... லட்சம் லட்சமாக கொட்டித் தருகிறோம் என்று வரிசையில் நின்ற படத் தயாரிப்பாளர்களையும் எனக்குத் தெரியும். "மாட்டேன். இந்தப் புனிதமான நடனக் கலையை நான் சினிமாவில் உபயோகிக்க மாட்டேன். இது என் உயிர். நான் விடும் மூச்சு. உங்கள் லட்சத்துக்கு நன்றி; போய்வாருங்கள்'' என்று அந்தத் தயாரிப்பாளர்களைத் திருப்பி அனுப்பிய யாமினி கிருஷ்ணமூர்த்தியையும் எனக்குத் தெரியும்.

எனவே, சாஸ்திரிய நடன மணிகளின் நிலை வேறு; வைஜயந்திமாலாவின் நிலை வேறு. பின்னவரின் நடனத் திறமைக்கு மரியாதையைக் கொடுத்துவிட்டு நான் சொல்கிறேன்: "இரண்டு நிலையும் ஒன்றாகிவிடாது''.

இந்த அட்டைப்படக் கட்டுரை வெளியாகி பல ஆண்டுகள் ஓடிப் போயின. நானும் 'வீக்லி'யில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

ஊட்டிக்கு ஒரு நாள் நான் என் மனைவியுடன் போயிருந்தேன். அங்கே அன்று தேவரின் 'வெள்ளிக்கிழமை விரதம்' படத்தை முக்கியமானவர்களுக்கான பிரத்தியேகக் காட்சியாக போட்டுக் காட்டினார்கள்.

தன் கணவர் பாலியுடன் வைஜயந்திமாலாவும் வந்திருந்தார். என்னை அறிமுகப்படுத்தி வைத்தபோது 'ஹலோ' என்று சொல்லும் நாகரிக சம்பிரதாயத்தைக்கூட கடைப்பிடிக்க மனமின்றி வைஜயந்திமாலா முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

டாக்டர் பாலி மட்டும் மிக இனிமையாக எங்களோடு பழகினார்.

படம் பார்க்கும்போது வைஜயந்திமாலாவின் பக்கத்து சீட்டில் என் மனைவி அமர்ந்திருந்தாள். வைஜயந்திமாலா அவளிடமும் ஒரு வார்த்தை பேசவில்லை.

என்னை அவர் தெரிந்துகொள்ளாததால் அவரது புகழுக்கோ அல்லது நிலைக்கோ எந்தவிதமான நஷ்டமும் இல்லை. அதே போல, வைஜயந்திமாலா முகத்தைத் திருப்பிக்கொண்டதால் என் வாழ்வு அஸ்தமித்து விடும் என்பதும் இல்லை.

ஆனால் ஓர் உண்மையை நான் பிடிவாதமாக நம்புகிறேன்.

ஒருவரது 'இமேஜ்' என்பது தானாக வரவேண்டும். அப்படியின்றித் தானே அதை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும்போது, அந்தக் கலைஞர் - ஆணோ பெண்ணோ - எவ்வளவு உன்னதமான படைப்பாளியாக இருந்தாலும், நாளடைவில் அம் முயற்சி மங்கிப்போவது மட்டுமல்ல, மறைந்தும் போகும்.

# வெஸ்டன் ஜூவல்லர்ஸ்

வாரத்தில்
ஏழு நாள்களும்
திறந்திருக்கிறது

ஓரே முறையில் 500 ஸ்ரேர்ளிங்
பவுண்களுக்கு மேல் நகைகள்
வாங்குவோருக்கு ஒரு
வைர மூக்குத்தி இனாம்!

ஓரே முறையில் 2000 ஸ்ரேர்ளிங்
பவுண்களுக்குமேல் நகைகள்
வாங்குவோருக்கு
வைர முக்குத்தியுடன்
ஒரு தங்க நாணயம் இனாம்!!



அலை அலையாய்
திரள்வோர்
உள மகிழ்வு
காணீர்!

# WESTERN JEWELLERS

**230 UPPER TOOTING ROAD, TOOTING, LONDON SW17 7EW**
**TEL: 020-8767 3445, FAX: 020-8767 3753**
Web: http://www.luxmi.com/western

**The First & Best Tamil Jewellers in London**

# நாடக அரங்கம்

சிறுவர் ஓவியம்





தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க விளையாட்டுப் போட்டியின்போது நடைபெற்ற ஓவியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற ஓவியம் இது.

நாடக அரங்கம் ஒன்றை குறியீட்டு ஓவியம் மூலம் அழகாக வெளிக் கொணர்ந்திருக்கிறார் 11 வயதான சிறுமி தாரணி இரத்தினராஜா.

மேடையில் நாடக பாத்திரங்களை முகமூடிகளுடன் உருவகப் படுத்திய தாரணி, அரங்க அவையினரை நம்மவர் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வண்ணங்கள் மூலம் குறியிட்டுக் காட்டியிருக்கிறார்.

தாரணி, என்பீல்டைச் சேர்ந்த திரு இரத்தினராஜா, டாக்டர் (திருமதி) கருணாதேவி இரத்தினராஜா தம்பதியரின் புதல்வி.

12 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவில் தாரணி இப் போட்டியில் கலந்துகொண்டு இதனை வரைந்திருந்தாலும் அனைத்து பிரிவிலுமான முதல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

'அவருடைய உருவக எண்ணம் இதில் உயர்வாக வெளிப்படுகிறது' என்று குறிப்பிடுகிறார் போட்டியின் நடுவரான பிரபல ஓவியர் திரு கே. கிருஷ்ணராஜா.

வாசக நேயர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உளமார்ந்த புதுவருட வாழ்த்துக்கள்!

# சங்கதி

- பைரவி -

சென்னையில் இசைவிழா 'ஆரவாரம்' முடிந்ததும் திருவையாற்றில் தியாகராஜ ஆராதனை ஆரம்பிக்கிறது. கருநாடக சங்கீதத்தின் மேன்மை - அதன் உன்னதமான சுகாநுபவத்தின் ஜீவன் - அதன் பக்தி அம்சமே என்பதை ஆரவாரத்தின் பின்னர் அந்த ஆராதனை உணர்த்திவிடுகிறது.

காவேரிக் கரையில், நாதபிரம்மமான ஸ்ரீ தியாகராஜரின் சமாதியருகே நடைபெறும் தியாகராஜ உற்சவ ஆராதனையில், பத்திமையில் ஒளிரும் அவரின் கீர்த்தனைகளால்ஆராதிக்கிறார்கள். கருநாடக இசையின் மகோன்னதம் ஜுவாலித்துப் பிரகாசிக்கிறது.

திருவையாற்றில் நடைபெறும் இந்த ஆராதனைக்கு அப்பால், தமிழகத்திலும், மற்றும் இந்திய மாநிலங்கள் பலவற்றிலும் பல்வேறு இடங்களில் நடைபெறும் தியாகராஜ உற்சவ நிகழ்ச்சிகளைவிட, இப்போது இந்தியாவுக்கு வெளியிலும், உலகின் பல்வேறு பகுதிகளில் தியாகராஜ உற்சவங்கள் நடைபெறுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக லண்டனிலும் இது நடைபெற்றுவரும்போது, இந்த ஆண்டு இதில் ஒரு சிறப்பு.

விம்பிள்டன் விநாயகர் ஆலய மண்டபத்தில், பொதுவாக இங்குள்ள கலைஞர்கள் அனைவருமே கலந்துகொண்ட ஓர் ஆராதனையாக அது நடைபெற்றது. இது சாமான்யமானதா, என்ன? ஆனால், திருஷ்டிபட்டுவிடவேண்டாம்!

மூத்த கலைஞரான திருமதி சரஸ்வதி பாக்கியராசாதான் இப்படி ஓர் அரும் காரியத்தைச் செய்தார். விம்பிள்டன் ஆலய நிர்வாகத்தினரும் வேறும் கலைஞர்கள் சிலரும் அவருக்கு ஒத்தாசை புரிந்தார்கள்.

ஓரிருவர்ரத்தான் காணோம். வந்தவர்கள் சிலரிடையேயும், 'எல்லோரும் ஒரு கீர்த்தனை மட்டுமே இசைக்க, ஒருசிலர் மட்டும் எப்படி இரண்டு கீர்த்தனைகள் இசைத்தார்கள்' என்ற 'முணுமுணுப்பு' இருந்தது.

முதல்நாள் மாணவர்களும், இரண்டாம் நாள் கலைஞர்கள் பலருமாக கலந்துகொண்ட நிகழ்ச்சியில், இறுதியில் பஞ்சரத்தினம் பாடப்பட்டது.

தியாகராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஐந்தையும் முறையாகப் பாடக்கூடியவர்களுக்கு பொதுவாகவே 'பஞ்சம்'தான். எப்போதாவது, எவராவது ஓர் இசைக் கலைஞர் 'ஒலிவாங்கி வேண்டாம்' என்று, அதனை மற்றையவருக்கு வழங்கும் 'வள்ளன்மை'யை எங்காவது பார்த்ததுண்டா? விம்பிள்டனில் இது நிகழ்ந்தது!

ஆனாலும் பரவாயில்லை; அடுத்தடுத்த ஆண்டுகளில், 'கோஷ்டி கானமாக' இல்லாமல், பஞ்சரத்தினம் அதன் ஜொலிப்போடு மிளிரட்டும். இசை பயிலும் இளைய தலைமுறை அதில் லயிப்படையட்டும்.

அதற்கு ஏற்றவிதத்தில், அநேகர் அமரக்கூடிய இடமொன்றிலும் தொடர்ந்தால் சரஸ்வதி பாக்கியராசா பாக்கியவதி.

இசையோ, நடனமோ பாரதிய வித்திய பவன் மண்டபத்தில் அதனை ஒரு தனி கலையுணர்வோடு ரசிக்கலாம். அப்படி ஒரு சூழல் அங்கு அமைகிறது.

ஆனால், சமயங்களில் மோசம் பண்ணிவிடுகிறார்களே! அண்மையில், ஓ. எஸ். தியாகராஜன் கச்சேரி. டெல்லி சுந்தரராஜன் வயலின்; திருவாரூர் பக்தவத்சலம் மிருதங்கம். இங்கு எளிதாக கிடைத்துவிடுகின்ற ஒன்றா?

கச்சேரியை இடைநிறுத்தி கன்டீனுக்கு அனுப்பிவிட்டார்கள். கலைந்த சுருதி எளிதில் சேர்ந்துவிடுமா, என்ன?

அந்தக் கச்சேரியை முழுமையாக அநுபவிக்க அநுமதித்து, அதன் பின்னர் கன்டீன் சுவையையும் அநுபவிக்க விட்டிருக்கலாமே. இசையை சுவைத்து ரசிப்பவர்கள் நல்ல சுவையையையும் ரசித்துச் சுவைப்பார்கள். இப்படியான கச்சேரிகளிலாவது இந்த வழக்கத்தை பாரதிய வித்திய பவன் மேற்கொண்டாலென்ன?

புனருத்தாரண வேலைகளுடன் புதுமெருகோடு புது மண்டபமாக பவன் மண்டபம் அமையவிருக்கிறது. அதில் ஒரு புது விதி செய்வார்களா?

இது இருக்கட்டும்; இங்குள்ள இசை, நடன கலைஞர்களில் - இசை பயில்வோரில் எத்தனைபேர் அந்தக் கச்சேரிக்கு வந்தார்கள்?

கலைஞர்களை விடுவோம்; ஆனால் நம் பிள்ளைகள் நன்றாக பாட வேண்டும் என்ற ஆசை நமக்கு உண்டல்லவா? அவர்கள் இத்தகைய கச்சேரிகளை கேட்கவேண்டாவா?

MAIN AGENT FOR SRILANKAN AIRLINE
கொழும்பு, மற்றுமிடங்களுக்கு அதி விசேட கட்டணங்கள்
COLOMBO - LONDON - COLOMBO £595 inc.tax (Valid 3 months)
SYDNEY MELBOURNE from £570
LONDON - COLOMBO - LONDON
from £440
For additional £20 travel to
Singapore / KL / Chennai / Trivendrum / Trichy
For additional £30 travel to
Dhaka / Jakarta / Mumbay / Delhi
For additional £40 travel to
Hong Kong
All fares excluding Airport Taxes. Credit Cards Accepted. Subject to conditions. Fares subject to change without notice.
Unaccompanied Baggage by
Sea or Air to Colombo and other worldwide destinations.
Most competitive rates
AIR FREIGHT TO - CHENNAI/TRIVENDRUM £75 for 25Kg (Adl. £1.40 / Kg.)
- COLOMBO £45 for 25Kg (Adl. £1.25 / Kg)
In Colombo all your goods go to our modern bonded werehouse built to serve you for the millennium with efficient and quick service.
LAKSIRISEVA - 66 NEW NUGE ROAD, PELIYAGODA Tel: 575576
❑We can arrange Packing, Collection and Insurance for your goods
❑Collection from anywhere in UK
GLEN CARRIERS LTD
14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ,
Telephone: 020-8740 8379/020-8749 0595, Fax: 020-8740 4229 Telex: 929657 Glenca G
Email: glencarriers@netscapeonline.co.uk Website:http://www.glencarriers.dial.pipex.com
IATA
ATOL 74395
The most trusted and reliable name in the trade

# KUMARANS

Imports & Exports

# குமரன்ஸ்

## Imports & Exports

உங்களுக்கு அன்றாடம் தேவையான
'லீலா' தயாரிப்பு பொருள்களை
மொத்த விற்பனை விலைக்கு தொகையாக வாங்கி
சிக்கனமடையுங்கள்!

**142 HOE STREET**
**WALTHAMSTOW, LONDON E17 4QR**
**TEL: 0181-521 4955 FAX: 0181-530 5655**

# KUMARANS

லீலா தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்



# TRICO

இலங்கைக்கும்
இந்தியாவுக்கும்
மிக நியாயமான கட்டணத்தில்
உங்கள் பொருள்களை அனுப்புங்கள்

**WE OFFER**

- Seven days collection to suit your time
- To deliver empty cases and collect
- Twice a month regular sailing to Colombo
- No charges to be paid in Sri Lanka except duties or taxes
- Warehouse and office facilities under one roof

**Free clearance from Colombo**

| VESSEL | DEPARTS | ARRIVES | CLOSING |
|---|---|---|---|
| PUSAN SENATOR | 20.04.01 | 04.05.01 | 16.04.01 |
| PEKING SENATOR | 04.05.01 | 18.05.01 | 30.04.01 |
| PENANG SENATOR | 18.05.01 | 01.06.01 | 14.05.01 |
| PORTUGAL SENATOR | 01.06.01. | 15.06.01 | 26.05.01 |

**RING US NOW**

- Full house shipment to Sri Lanka and Worldwide
- Vehicle shipments to Sri Lanka and other destinations
- Excess luggage by Air Freight or Sea

# TRICO INTERNATIONAL (SHIPPING) LTD

**Unit 4, Building C, Clarendon Road, London N22 6XJ**

**Tel: 020-8888 8787 Fax: 020-8889 5445**

e-mail: trico@mcmail.com

# வைர மாளிகை

செய்கூலி மட்டும்
செலுத்தினால் போதும்

உங்கள் பழைய நகைகளுக்குப்
பதிலாக
உங்களுக்குப் பிடித்தமான
புதிய நகைகளை
பெற்றுக்கொள்ளுங்கள்!



## Diamonds Palace

**76 TOOTING HIGH STREET**
**LONDON SW17 0RN**
**TEL: 020-8767 5333 FAX: 020-8772 7995**

---

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரித்தானியா**

தாயகத்தின் மீளக்குடியமர்வுத்திட்ட நிதிக்காக

**11ஆவது வருடாந்த சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி**

## TRO CHALLENGE CUP 2001

(Seven a side knock out Football competition)

சிறுவர்களுக்கான
ஓட்டப்போட்டி
(25, 50, 100மீற்றர்)

- பணிஸ் ஓட்டம்
- சாக்கு ஓட்டம்
- கரண்டி ஓட்டம்
- சைக்கிள் ஓட்டம்
- வலைப்பந்தாட்டம்

**06 May 2001Sunday**
**(Bank Holiday)**
DOUGLAS EYRE SPORTS CENTRE
Copper Mill Lane, Walthamstow
London E17 7HE

**TRO YOUNGSTERS FOOTBALL 2001**
Under 10, 12, 14 & 16 (7 A Side Knock Out)

❑ இளைஞர் முதல் முதியோர் வரை கலந்துகொள்ளும்
வினோத விளையாட்டுப் போட்டிகள்

■ **பல்வேறு தாயக உணவு வகைகள்**
**குறைந்த விலையில் சுடச்சுட விற்பனைக்கு**

■ **ஒரே இடத்தில் சகல பொருள்களையும் வாங்கக்கூடிய முறையில்**
**பல்வேறு வியாபார நிறுவனங்கள்**

*அனைவரையும் வருகவென அழைக்கின்றோம்*
*பிரவேசம் £2.00*

TRO Football Competition Committee
79 Hoe Street
London E17 4SA

Tel: 020-8520 5876
Fax: 020-8521 6175

---

## NAG & CO
## SOLICITORS

**Administrators of Oaths**

HIGH QUALITY SERVICES
PROVIDED BY EXPERTS
IN

- ❑ IMMIGRATION
- ❑ DEBT ❑ EMPLOYMENT
- ❑ HOUSING ❑ FAMILY LAW
- ❑ CRIME ❑ CONVEYANCING
- ❑ TRAFFIC OFFENCES
- ❑ WELFARE ❑ E.C. LAWS

Unit 3, Holles House
Myattsfield South, Overton Road, London SW9 7JN
Tel: 020-7737 1211 Fax: 020-7737 0809

# MAIN AGENT FOR SRILANKAN AIRLINES

SriLankan



Fantastic fares to COLOMBO

CHENNAI

IATA

For great service & great offers call: Siva, Molly, Reshma or Prem

ATOL 75047

**361 London Road, Croydon, Surrey CR0 3PB**

**Tel: 020-8665 0206 Fax: 020-8689 2576**

E-mail sales@linkair.co.uk Open Monday to Saturday 10.00 - 20.00 hrs

For Emergency Travel Please Call: 0956 676360 / 0958 369989

LinkAIR Travels Limited

# ARM Associates

ESTABLISHED OVER 25 YEARS

## FOR ALL TYPES OF INSURANCE

RETAIL SHOP PACKAGE
•
PROPERTY OWNERS POLICY
•
CARE HOMES
•
PETROL STATIONS / SHOPS ONLY
•
HOUSEHOLD, COMPUTERS
•
BUILDING INSURANCE FOR LET PROPERTIES
(Including DSS or STUDENTS Lets)

**MOTOR INSURANCE**

- Performance and sports car
- Second car with younger drivers
- International / Provisional Licence
- Company cars / Fleet
- Self-Drive Hire

**TRAVEL INSURANCE**

- Annual Policy
- International Health Plan for Expatriates
- VisitorSure - for non-UK residents travelling from / to anywhere in the world

**Please pay us a visit**
http://www.financial.advisernet.co.uk
E-mail: srini@srinivasan.co.uk


உங்கள் காப்புறுதித் தேவைகளை தமிழிலேயே
பேசித் தெளிவு பெறலாம்

**Fax: 020-8763 2220**
**Mobile: 0958 42 42 42**
**Personal: 020-8763 1222**

# TEL: 020-8763 2221

## ஏ. என். சிவராமன்:

# தமிழ்ப் பத்திரிகை உலகின் உதாரண புருஷர்



ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப் பத்திரிகையுலகில் புகழ்பெற்று விளங்கிய பத்திரிகை ஆசிரியரான திரு ஏ. என். சிவராமன் மார்ச் முதலாம் தேதி சென்னையில் காலமானார். சென்னையிலிருந்து வெளியாகும் 'தினமணி' நாளிதழின் ஆசிரியராக 47 ஆண்டுகள் பணியாற்றிய திரு சிவராமன் அவரது 97 ஆவது பிறந்த நாளன்று மயிலாப்பூர் மருத்துவ மனை ஒன்றில் காலமானார். 'தமிழ்ப் பத்திரிகைத் துறையின் பலம் வாய்ந்த தூணாக விளங்கியவர் திரு சிவராமன்' என்றும் 'அவரது இழப்பு பத்திரிகை உலகக்கு பேரிழப்பு' என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி குறிப்பிட்டிருந்தார்.

பத்திரிகைச் சுதந்திரத்திலும் பத்திரிகா தர்மத்திலும் பெரு நம்பிக்கை கொண்டிருந்த திரு சிவராமன், சுதந்திரம் வரை மாநிலம் முழுவதும் இந்திய தேசிய காங்கிரசுக்கு ஆதரவாக மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்கு பெரிதும் உதவினார். சுதந்திரத்தின் பின்னர், ஹிந்தி பேசாத மாநிலங்களில் ஹிந்தி திணிப்பை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் கிளர்ந்த போது அதற்கு ஆதரவாகவிருந்தார். 1967இல் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றியபோது திரு சிவராமனின் ஆதரவான பங்கை முதலமைச்சர் அண்ணாதுரை அப்போது குறிப்பிட்டிருந்தார்.

செய்திகளை அளிப்பதோடு மாத்திரமல்லாது, அபிவிருத்தியடையும் நாடொன்றில் வாசகர்களுக்கு ஜனநாயக கோட்பாடுகளை ஊட்டுவித்து, அபிவிருத்தி முயற்சிகளில் அவர்களின் ஆதரவைப் பெருக்கவும் பத்திரிகை உதவ வேண்டும் என்பது அவரின் எண்ணமாக இருந்தது. 1975இல் இந்திரா காந்தியின் அவசரகால ஆட்சிக்கும் திரு சிவராமன் பெரும் கண்டனமாக இருந்தார்.

ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் தமிழ்ப் பத்திரிகைகளுக்குமிடையேயான காத்திர தன்மையின் வித்தியாசம் நீங்கி, ஆங்கில பத்திரிகை வாசகனைப்போல் தமிழ்ப் பத்திரிகை வாசகனின் அறிவையும் உயர்த்தவேண்டும் என்பது அவரின் நோக்காகவிருந்தது. இதற்காக திரு சிவராமன் விண்வெளி விஞ்ஞானத்திலிருந்து அரசியல் சித்தாந்தம் வரை; தொகுதி சீர்திருத்தத்திலிருந்து நீர்ப்பாசன தொழில்நுட்பம் வரை; வரி நடவடிக்கைகளிலிருந்து கலாச்சார விவகாரங்கள் வரை அனைத்தையும் மிக எளிய தமிழில் பத்திரிகையில் கொணர்ந்தார். மிக சிக்கலான விடயங்களையும் தமிழில் அழகாக வெளிக்கொணரும் லாவகம் சிவராமனுடையது. சிவராமனின் உயர்ந்த பத்திரிகா நெறியுடனான இப் பணி சுதந்திர இந்தியாவில் தினமணிக்கு சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றுக்கொடுத்தது.

1934இல் தினமணி ஆரம்பித்த போது திரு சிவராமன் அதன் உதவி ஆசிரியராக சேர்ந்தார். தமிழ்ப் பத்திரிகையாளர்களின் முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்த மற்றொரு பிரபல பத்திரிகையாளர் ரி. எஸ். சொக்கலிங்கம் ஆசிரியராகவிருந்தார். 1944இல் திரு சொக்கலிங்கம் விலகியதும் திரு சிவராமன் ஆசிரியராக பதவியேற்றார். 1987வரை அவர் அப் பதவியிலிருந்தார். 'கணக்கன்', 'அரைகுறைப் பாமரன்' என்று பல்வேறு புனைபெயர்களில் அப்போது பல்வேறு துறைகள் சார்ந்தும் அவர் எழுதினார். பிரெஞ்சு, சமஸ்கிருதம், உருது உள்பட 17 மொழிகள் தெரிந்தவர் அவர்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்த திரு சிவராமன், கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் காந்தியின் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு 18 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்ததில் கல்லூரிப் படிப்பை இழந்தார். சிறிதுகாலம் ஆசிரியத் தொழில் புரிந்தவர் பின்னர், திரு ரி. எஸ். சொக்கலிங்கம் அப்போது ஆசிரியராகவிருந்த 'காந்தி' சஞ்சிகையில் அவருக்கு உதவியாக இணைந்தார். அந்தவேளையிலும் சி. இராஜகோபாலாச்சாரி தலைமையில் வேதாரணியத்தில் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டதில் 20 மாதங்கள் சிறையிலிருந்தார்.

53 ஆண்டுகள் 'தினமணி'யில் பணியாற்றிய திரு சிவராமனுக்கு 1988இல் பி.டி. கொயங்கா கௌரவ விருது வழங்கப்பட்டது. 1987 ஆகஸ்டில் அவர் தினமணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் எழுத்துப் பணியில் அவர் ஓய்வு பெறவில்லை. தினமும் எட்டு மணித்தியாலங்கள் வாசிப்பதை இறக்கும்வரை ஒரு வழக்காக அவர் கொண்டிருந்தார்.

# 'உயிர் விசை'

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் ஏற்படும் மரணங்களையும் மனித துயரங்களையும் சித்தரித்து 'உயிர் விசை' என்ற அரங்க நிகழ்வொன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேற்றியிருக்கிறார்கள். முன்னர் இவர்கள் மேடையேற்றிய 'அக்கினிப் பெருமூச்சு' அரங்க நாடகத்தின் தொடர்ச்சியாக இதனைத் தயாரித்திருக்கிறார்கள்.

1996-97 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்கள், காணாமல்போனவர்கள் பற்றி சேகரித்த தகவல்களில் ஏற்பட்ட அநுபங்களின் வெளிப்பாட்டில் 'அக்கினிப் பெருமூச்சு' முன்னர் இவர்களால் மேடையேற்றப்பட்டது. காணாமல் போனவர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு செம்மணி புதைகுழிகளில் புதைக்கப்பட்டார்கள் என்றே நம்பப்படுகிறது. இந்த நாடகத்தில் வசூலாகும் தொகை இந்தக் காலப்பகுதியில் கொலையுண்ட அல்லது காணாமல்போன பெற்றோர்களின் குழந்தைகளுக்கான கல்விக்கு பயன்படுத்தப்படும் என்று நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாணவர்கள் தெரிவிக்கிறார்கள்.

அக்கினிப் பெருமூச்சைத் தயாரித்தளித்த திரு ரி. தேவானந் 'உயிர் விசை'யையும் தயாரித்திருக்கிறார். 'விட்டுக்கொடுப்பும் பணிவும் நம் மீது திணிக்கப்படுகின்றன. எம்மைச் சூழ்ந்த பயம் எமது மண்ணின் வேதனையைக் கூறவியலாது எம்மைத் தடுக்கிறது. விளைவாக, பலவற்றை நாம் நம்முள் அடக்கி வைத்திருக்கிறோம். விதம் விதமான முகமூடிகளை அணிய வெளியாரால் நிர்ப்பந்திக்கப்பட்டு, எமது தனித்தன்மைகளை அவ்வப்போது நாம் மாற்றிவருகிறோம்' என்று இவ்வாறு திரு தேவானந் உயிர்விசையின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

# உளவு உடன்படிக்கை

பாதுகாப்பு உளவு பரிவர்த்தனை தொடர்பான உடன்படிக்கை ஒன்றை இலங்கையும் ரஷ்யாவும் கைச்சாத்திட்டுள்ளன. கொழும்புக்கு விஜயம் செய்த ரஷ்ய உளவுத்துறைத் தலைவர் நிக்கொலாய் பற்றுஷேவ் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் போதைப் பொருள் கடத்தல், சட்ட விரோத குடியேற்றம் ஆகியவற்றைத் தடுப்பதில் இருநாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைப்பை நல்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# எதிரொலி



ஆலயங்கள் அமைத்திருக்கிறோம்.
தமிழ்ப் பாடசாலைகள் நடாத்துகிறோம்.
கலை முயற்சிகளில் ஈடுபடுகிறோம்.
களியாட்டங்கள், விளையாட்டுக்கள் நிகழ்த்துகிறோம்.
பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகள் இயக்குகிறோம்.

- இவையெல்லாம், பிரிட்டனில் வாழ்கின்ற நம்முடைய தனிப்பட்ட விவகாரங்கள் அல்லாத, ஒரு சமூகம் சார்ந்த நடவடிக்கைகள்.

நாம் எப்போது இங்கு வந்தோம்?

மொறிஷியஸ் போல், பீஜி போல், பல தலைமுறைகளில் நம்முடைய பழக்க வழக்கங்களை - பண்பாடுகளை - கலைகளை; மொத்தத்தில் நம் அடையாளத்தை, தொடரும் அத் தலைமுறைகளில் தொலைத்துவிட்டோமா? அப்படித் தொலைத்துவிட்டு நம் அடையாளத்தைத் தேடுகிறோமா?

இல்லை.

அந்நிய நாடொன்றில், அதன் மாறுபட்ட கலாச்சார சூழலில் நம் அடையாளத்தை பேணவே முயல்கிறோம். அப்போது அது ஒரு புது பரிமாணமாகவே வெளிப்படும்.

ஆனால், அது நம்முடைய வேர்களிலிருந்து வெளிப்படவேண்டும்.

இதில் நாம் பெரிதும் முயல்கிறோம். ஆனாலும், வேர்களே அற்றவர்கள் போலவும்தான் நாம் நடந்துகொள்கிறோம்.

இது ஏற்படுத்தும் வேதனை பெரிது.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி' என்பதை மேடை முழக்கமாகவே கருதினாலும், அதன் அர்த்தம் நமக்கு தெளிவானது.

விஞ்ஞான, தொழிநுட்ப மேம்பாட்டுச் சூழலில் - நமக்குக் கிடைத்த நாணய பலத்தில் - நமது அடையாளம் செழுமையோடு துலங்கவேண்டும்.

இந்த சிந்தை நமக்கு உண்டு.

அதில் நம் பெரும் உழைப்பும் உண்டு. ஆனால், அந்த அடையாளத்தைச் சிதைத்துவிடவல்ல போக்குகளும் உண்டு. அவை ஒருவித பலமும் கொண்டே இருக்கின்றன.

சமூக நலம் சார்ந்த - நேர்மையான சிந்தனையை வெளிப்படுத்த இயலாத நிலை பல துறைகளிலுமே உண்டு. நமக்கான சுய விமர்சனத்தை நாம் அனுமதிப்பதில்லை; ஆலோசிப்பதில்லை; ஏற்றுக்கொள்வதில்லை.

தனித்த புகழின் நாட்டத்திலும் செல்வாக்கிலும் இது பெரிதும் மௌனித்தே விடுகிறது.

'புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் இன்று தமிழின் - சைவத்தின் 'ஆபத்பாந்தவர்கள்' என்ற உபசாரச் சொல் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது.

ஆனாலும், 'ஸ்ரீமான் பொதுஜனத்'தின் ஸ்பஷ்டமான விமர்சனம் அனைத்து துறைகளிலுமே உண்டு. ஓங்கி ஒலிக்க திராணியில்லாவிடினும், அந்த குரல் எங்குமே ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

அந்தக் குரலின் எதிரொலியாகத்தான் அண்மைக்காலமாக ஒரு குரல் கேட்டுக்கொண்டிருந்தது; அது திடீரென்று இயற்கையில் அடங்கிற்று. அவ்வெதிரொலிக்கான குரல்களே அந்த இறுதி யாத்திரையில் நானா திசையிருந்தும் நிசப்தத்தோடு சூழ்ந்து குவிந்தன.

'உண்மைகள் உறங்குவதில்லை' என்று, அவை சிலவற்றை பத்திரிகையில் தட்டியெழுப்ப முயன்ற 'மாதகலான்' என்ற யோகராசா ஒரு சாமான்யன் என்றே வாழ்ந்தவர்.

அந்த சாமான்யனின் இறுதி யாத்திரை, பிரமுகரையும் விஞ்சி நின்றமை, 'உண்மைகள் உறங்குவதில்லை' என்ற வாழ்வின் எச்சம்.

ஆ-ர்

"Hey man, look at your life
Couldn't you have stayed a little longer?
Hey man, why did you leave your wife
Thought you were stronger?
Hey man, wanted you to bless my child
Spoil them mean with your smiles
Hey man, I'm just like you
Way we smile is the only proof
Oh no, I won't shed a tear
For you."

(மயானத்தில், 'கிற்றார்' இசையுடன், தந்தைக்கு அவர் மைந்தன் அளித்த பிரியாவிடை)

G
Low cost International Calls same as card prices
■ மலிவு கட்டணத்தில் சர்வதேச தொலைபேசி அழைப்புகள்
■ வாடகைக்கு தமிழ், ஹிந்தி VHS, DVD திரைப்படங்கள்
CALL SHOP AND VIDEO CLUB
All International Phone Cards 15% Discount
Tel: 020-8423 9988
GLOBAL TELECOM
Tel: 020-8423 9988
230B Northolt Road, South Harrow, Middx. HA2 8DU
(Opposite South Harrow Tube Station)


ரதி ஜுவல்லர்ஸ்
ரதி போன்ற அழகு;
அந்த அழகுக்கு அழகு தரும்
'ரதி'யின் நகைகள்!
அவை, எப்போதும்
மலிவு விலையில்!
தரமான
தங்க நகைகளுக்கு
என்றுமே
நம்பிக்கையான
ஸ்தாபனம்
RATHY JEWELLERS
28 EALING ROAD, WEMBLEY
TEL: 020-8903 3063 FAX: 020-8903 9711

# வாடிக்கையாளருக்கு மனம் நிறைந்த
# 10 ஆண்டு சேவை

# BEST FOOD

SUPERMARKET

லண்டனில் இப்போது
அதி பிரசித்தமான
'திரு'
'யாழினி'
பிரான்ட்
உணவு பொருள்கள்

- அரிசி மா
- மிளகாய்த் தூள்
- நல்லெண்ணெய்
- அவல்
- ஊறுகாய்
- வடகம்

இன்னும்பல.....

உடனுக்குடன் இறக்குமதி செய்யப்படும்
காய்கறிகள்

மொத்தமாகப் பெற விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்

'யாழினி' மீன் வகைகள்
பெருமளவில்
தூத்துக்குடியிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்டுள்ளன
மொத்தமாக கொள்வனவு
செய்யவிரும்பும் விற்பனையாளர்கள்
எம்முடன் தொடர்புகொள்ளலாம்

ரூட்டிங் பகுதியில் 'திரு' 'யாழினி' பிரான்ட் பொருள்களின் ஏஜன்டுகள்:

**Prime Food & Wines**
118 High Street, Tooting, London SW17 0RR
Tel: 020-8682 3777

லண்டன் முழுவதும் ஏஜன்ட்டுகள் தேவைப்படுகிறார்கள்

# BEST FOOD

259-261 LONDON ROAD
WEST CROYDON CR0 2RL
Tel: 020-8684 6269 Fax: 020-8665 5299

நாள்தோறும் நான்கு செய்திகள்

நற்சிந்தனைகள், செய்தித்தாள் கண்ணோட்டம், யோகாசனப் பயிற்சி, பிரமுகர் சந்திப்பு, புலம்பெயர் நாடுகளின் கலை கலாச்சார நிகழ்வுகள், கவிக்கீற்று மற்றும் நேயர்களின் ஆக்கங்கள் கொண்ட பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி

காலைக்கதிர்

வாரம் ஒருமுறை உலக வலம்

தமிழ்பேசும் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகள் தொடர்பான ஆய்வு நிகழ்ச்சி எதிரொலி

ஈழத்தின் யதார்த்தங்களை எடுத்துரைக்கும் விழிப்பு

தீம் தக்க தீம், தில்லானா தில்லானா போன்ற

இசை நடன நிகழ்ச்சிகள்

சித்தி, வாழ்க்கை, ஆலயம், சம்சாரம், குலவிளக்கு, அம்மா, சாவித்திரி, கோகிலா எங்கே போகிறாள், சங்கமம், கேள்வியின் நாயகனே என பல ஜனரஞ்சக

சின்னத்திரைத் தொடர்கள்

சிறுவர் நிகழ்ச்சிகள், மகளிர் நிகழ்ச்சிகள்

தேனமுது, நெஞ்சில் நின்ற ராகம், திரை மசாலா, பழமை தந்த இனிமை, புதுவெள்ளம் போன்ற திரை இசைத் தொகுப்புக்கள்

நம்ம நேரம், கொண்டாட்டம், மீண்டும் மீண்டும் சிரிப்பு போன்ற

நகைச்சுவை நிகழ்ச்சிகள்

விசுவின் அரட்டை அரங்கம், பாட்டுக்குப் பாட்டு, சப்தஸ்வரங்கள் போன்ற

SUN TVயின் ஜனரஞ்சக நிகழ்ச்சிகள்

**விரைவில்....**

தீனா

உள்ளம் கொள்ளை போகுதே

நினைக்காத நாளில்லை

எங்களுக்கும் காலம்வரும்

நீ வருவாய் என...

குபேரன்

பாப்பா

புதிய திரைப்படங்கள்

அர்ச்சனைப் பூக்கள், பல்லாங்குழி, கிருஷ்ணதாசி என

புதிய சின்னத்திரைத் தொடர்கள்

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உங்கள் தீபம் தொலைக்காட்சி வழங்கும் அரிய வாய்ப்பு!

ஏப்ரல் 14ஆம் தேதியிலிருந்து
16ஆம் தேதிவரை
Eutel Sattellite
இணைப்பை வைத்திருக்கும்
அனைத்து நேயர்களும்
இலவசமாக எல்லா நிகழ்ச்சிகளையும்
பார்த்து மகிழலாம்

**Symbol Rate: 29900**
**Frequency: 10722 MHz**
**Polarization: Horizontal**

# தீபம்

DEEPAM T.V.

**1 Martindale Road, Hounslow, Middlesex TW4 7EW**
**Tel: 020-8814 6565 Fax: 020-8814 1144**
Email: info@deepamtv.tv